04-01-2024
O.S.No. 142/2018

வா. சா. 1 விஜயவனிதாஸ்ரீ அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1** மற்றும் **5** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

3 ம் பிரதிவாதி கந்தசாமி என் தகப்பனார். 4 ம் பிரதிவாதி சிவசெந்தில் என் சகோதரர். 2 ம் பிரதிவாதி ரேணுகா என் தாயாருடன் உடன் பிறந்த சகோதரி. என் அம்மா பெயர் கஜினி. 1 ம் பிரதிவாதி சீத்தாராமன் என் அம்மாவுடன் பிறந்த சகோதரர். 5 ம் பிரதிவாதி சுகுணா 1 ம் பிரதிவாதியின் மனைவி. தாவாச்சொத்தில் 1/9 பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். தாவாச் சொத்துக்கள் முழுவதும் ஆதியில் என் அம்மாவின் தாத்தா வரதராஜனுக்கு பாத்தியம் என்றால் சரிதான். வரதராஜனுக்கு குருவம்மாள் என்ற மனைவி. அவர்களுக்கு கிருஷ்ணவேணி மற்றும் சகுந்தலா என இரண்டு மகள்கள். கிருஷ்ணவேணியின் மக்கள்தான் 1,2 பிரதிவாதிகள் மற்றும் என் தாயார். குருவம்மாள் 1962 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்பு கிருஷ்ணவேணியும் சகுந்தலாவும் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 26.06.1962 ல் பாகம் பிரித்துக் கொண்டார்கள். என் அம்மாவுக்கு 1977 ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் சரிதான். 1977 ம் வருடம் என் தாயாருக்கு திருமணம் நடந்தபோது கிருஷ்ணவேணி குடும்பத்தில் எந்த பாகமும் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1977 ம் வருடம் என் அம்மாவுக்கு திருமணம் ஆகும்போது கிருஷ்ணவேணியின் தனிப்பட்ட சொத்து என்பதால் 1,2 பிரதிவாதிகளுக்கும் என் அம்மாவுக்கும் பாகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சகுந்தலாவுக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். அதானால் என் தாயாரை சகுந்தலா குழந்தையாக வளர்த்தார் என்றால் சரியல்ல. சகுந்தலா 2020 ம் வருடம் காலமானார். என் அம்மா 04.08.1977 லேயே ஒரு பாகப்பாத்தியவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பின்னர் 13.05.2005 ம்

வருடம் கிருஷ்ணவேணி, சீத்தாராமன், ரேணுகா ஆகிய மூவரும் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணவேணி 2010 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் 18.01.2015 ம் தேதி இறந்தார். என் தாயார் உயிருடன் இருந்தவரை பாகம் பிரித்தது செல்லாது என்றோ, பாக பாத்திய விடுதலை பத்திரம் செல்லாது என்றோ அவருக்குரிய பாகம் சம்மந்தமாக ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். 1993 ல் சகுந்தலா அவர் பாகத்திற்கு வந்த சொத்து முழுவதையும் என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டது என்றால் சரிதான். என் அம்மா சகுந்தலாவின் வளர்ப்பு பிள்ளையாக இருந்ததால்தான் சொத்து முகூதையும் என் அம்மாவிற்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. சகுந்தலா என்னை தூண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 5 ம் பிரதிவாதிகளுக்கு குழந்தைகள் இல்லாததால் என் சின்ன பாட்டி சகுந்தலா என்னை தூண்டிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சீத்தாராமன் அவரது மனைவியான 5 ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் குறித்து தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். எந்த வருடம் எழுதி வைத்தார் என்று தெரியவில்லை. என் சின்னப்பாட்டி சகுந்தலா, சுகுணா சொத்தில் பாகம் கோரி வேடசந்தூர் சப் கோர்ட்டில் அ.வ.எண்.250/2008 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு சுகுணா இறந்து விட்டதால் அவரது வாரிசுகளை சேர்ப்பதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு, 2005 ம் வருட வாக்கில் பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கு 2018 ம் வருடத்தில் நான் தாக்கல் செய்து உள்ளதால் காலாவதி தோஷத்திற்குட்படுகிறது என்றால் சரியல்ல. 1,5 பிரதிவாதிகளுக்கு குழந்தை இல்லாததால் என் சிறிய பாட்டி கிருஷ்ணவேணி இவ்வழக்கை போட்டுள்ளதால் இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சீத்தாராமனும், 2 ம் பிரதிவாதி ரேணுகாவும் பிரித்துக்கொண்ட சொத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.01.04 16:50:27 +0530

Principal District Judge,
Dindigul.